ராணி ரஸியா

இந்தியாவின் இஸ்லாமியப் பெண்ணரசி

வரலாற்றாய்வாளர்
செ. திவான் M.A., M.Phil.,



ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

வெளியீட்டு எண்: 160

ராணி ரஸியா

இந்தியாவின் இஸ்லாமியப் பெண்ணரசி

வரலாற்றாய்வாளர்

செ. திவான் M.A. M.Phil

இலக்கியச்சோலை
26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு
சென்னை - 600 003.

ராணி ரஸியா
இந்தியாவின் இஸ்லாமியப் பெண்ணரசி

வரலாற்றாய்வாளர் செ. திவான்

செப்டம்பர் 2021 | 32 பக்கங்கள் | ₹ 25

அச்சிடுபவர்: எஸ்.கே.எஸ். பிரிண்டர்ஸ், சென்னை - 02.

இலக்கியச்சோலை
26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு, சென்னை - 600003
© ஆசிரியர்

Raani Rasiya
Indhiyaavin Islaamiya Pennarasi

Se. Diwan

Sep 2021 | 32 Pages | Price ₹ 25

Printer: SKS Printers, Chennai - 02.

Ilakkiyacholai
26, Barracks Road, Periyamet, Chennai - 600 003
Cell: 99629 18724
ilakkiyacholai@gmail.com
© Author

உள்ளே.......

1. எண்ண அலைகள் 04
2. அடிமை அரசகுலமா? துருக்கிய சுல்தான்களா? 05
3. வாரிசாக வந்த வனிதை 06
3. ராணி ரஸியா 07
4. ஆட்சி நடத்திய அரிவையர் 10
5. சதித்திட்டமும் ராணி கொலையுறுதலும் 20
6. அரசியர் மீது அவதூறும் அதற்குரிய பதிலும் 22
7. கைராட்டையை நாட்டுக்குத் தந்தவர் 32

எண்ண அலைகள்

வரலாற்றை நாம் விட்டாலும் வரலாறு நம்மை விடுவதாக இல்லை. கிரேக்க மாவீரன் அலெக்சாந்தர் நாட்டுக்குள் ஊடுருவ சிந்து நதியின் மீது பாலம் அமைக்க உதவியவன் தட்சசீல மன்னன் அம்பி.

கி.பி. 1192 இல் தனது மகள் சம்யுக்தை பிருதிவிராஜ் சவுகானுடன் சென்று திருமணம் செய்து கொண்டாள் என்பதற்காக பிருதிவிராஜ் சவுகானை கோரி முகமதுவிடம் காட்டிக் கொடுத்தவர் ராஜா ஜெயச்சந்திரன்.

மரணத்திற்குப்பின் மகாவீர்சக்ரா விருதை 1947 இல் பெற்றவர் **பிரிகேடியர் முகம்மது உஸ்தான்.** *அண்டை நாடான பாகிஸ்தானுடன் தீரமாகப் போரிட்டு இந்தியாவின் உயரிய விருதான* **பரம்வீர்சக்ரா** *விருதை 1965 இல் பெற்ற* **ஹவில்தார் அப்துல் ஹமீது.** *மரணத்திற்குப்பின் மகாவீர்சக்ரா விருதை 1965இல் பெற்ற லெப்டினெனன்ட் கர்னல்* **சலீம் சலெப்.** *இந்திய நாட்டு வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் அல்லது மறக்கடிக்கப்படும் அல்லது மறுக்கப்படும் வரலாறுகள் ஏராளம்; ஏராளம்.*

இந்தியாவில் டில்லியில் அரசாண்ட ஒரே இஸ்லாமிய அரசி ரஸியா சுல்தான். அவர் வாழ்க்கை வரலாறு இந்திய வரலாற்றில் ஒரு பாராவாக அல்லது ஓரிரு வரியாக உள்ளது. **அத்துடன் அவரது ஒழுக்கத்தின் மீது களங்கமும் கற்பிக்கப்படுகிறது.**

ராணி ரஸியா சுல்தானாவின் உண்மை வரலாறு என்ன? அதனைச் சொல்வதே இச்சிறிய நூல். இதனை நல்லமுறையில் கணினியாக்கம் செய்து தந்த தம்பி அப்துல் நசீருக்கும் நூலை வெளியிடும் இலக்கியச்சோலை பதிப்பத்திற்கும் நன்றி. எல்லாம் வல்ல இறைவனுக்கும் காலத்திற்கும் நன்றி.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை.
எழுதுவதற்காக வாழ்கிறேன்.

3.5.2021

செ. திவான்

அடிமை அரசகுலமா? துருக்கிய சுல்தான்களா?

டில்லியில் **துருக்கிய** அரசர்கள் **கில்ஜி** அரசர்கள், **துக்ளக்** அரசர்கள் **சையத்து அரசர்கள், லோடி** அரசர்கள் என ஐம்பெரும் பிரிவினர் கி.பி. 1206 இலிருந்து 1526 வரை ஆட்சி புரிந்தனர்.

1526லிருந்து **மொகலாயரது** ஆட்சி பாபரால் தோற்றுவிக்கப்பட்டு, பகதூர்ஷா வரையில் (1858) நீடித்திருந்தது.

மகாராசா பாசுகரதத்தரின் மகனான விசாகதத்தர் வடமொழியில் எழுதிய வரலாற்று நாடகம் 'முத்ரா ராட்சசம் (முத்திரைக் கணையாழி)

இந்நாடகத்தில் மிலேச்சர் என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இம்மிலேச்சர் கஜினி முகம்மது (1000 – 1027) கோரி முகம்மது (1173 – 1206) ஆகிய முஸ்லிம் மன்னர்களைக் குறித்திருக்கலாம் என்று பேராசிரியர் **வில்சன்** எழுதியுள்ளார்.

முத்ராராட்சசம் நூல் பற்றி கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாடக இலக்கண நூலான **தசரூபகத்தில்** குறிக்கப்பட்டுள்ளது. எனவே விசாகத்தரின் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பர் அறிஞர். பேராசிரியர் வில்சன் தெரிவித்த கருத்தும் தவறு.

எதை எடுத்தாலும் முஸ்லிம் மன்னர்களைக் குறைத்தும், தாக்கியும் எழுதும்போக்கு அன்றிலிருந்து இன்று வரை தொடரத்தான் செய்கிறது; நிற்க.

குத்புத்தீன் ஐபெக்

முகமது கோரியின் அடிமைகளுள் ஒருவர் குத்புதீன் ஐபெக் (1206 – 1210) அவருக்கப் பின் ஆட்சிக்கு வந்தவர்கள் ஆராம்ஷா (1210 நவம்பர் முதல் 1211 ஜூன் வரை) இல்தூத்மிஷ் (1210 – 1236), ருக்னுத்தீன் பிருஷ்ஷா (1236). இவர்களுக்குப்பிறகு ரஸியா சுல்தான் ஆட்சிக்கு வந்தார். (1236 – 1240). குத்புத்தீன் ஐபெக் **'குத்பீ''** குலம்; இல்டூட்மிஷ் **ஷம்ஸி** குலம்; பின்னால் வந்த பால்பன் (1266 – 1287) **பால்பானி** குலம்.

வெவ்வேறு குலத்தைச் சேர்ந்த இவர்களை ஒட்டு மொத்தமாக அடிமை வம்சம் என்று அழைப்பது நியாயந்தானா?

குத்புத்தீன் ஐபெக் அடிமையாக இருந்து எப்போது சுதந்திரம் பெற்றார் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. ஆனால் இல்டுட்மிஷ் அரசர் ஆவதற்கு முன்பே சுதந்திரம் பெற்றுவிட்டார்.

பால்பன் சுதந்திரத்தைப் பெற்றாரா? இல்லையா? என்பதில் கருத்து மாறுபாடு உண்டு. ஏனைய ஆறு அரசர்களான ரஸியா சுல்தான் (1236 – 1240), பஹ்ரம் ஷா (1240 – 1242), மசூத் (1242 – 1246), நசிருதீன் முகமது (1246 – 1266), கியாசு தீன்பால்பன் (1266 – 1286), கைகோபாத் (1286 – 1290) இவர்கள் **அடிமைகளாக என்றுமே இருந்ததில்லை. எனவே இவர்களை அடிமை குல அரசர்கள் என்று அழைப்பது பொருந்துமா?**

முந்திய துருக்கிய சுல்தான்கள்

ஆகவே அவர்களை முந்திய துருக்கிய சுல்தான்கள் என்று கூறுவது மிகப் பொருத்தமாகத் தெரிகிறது என்பார் சென்னை பச்சையப்பன் கல்லூரி வரலாற்றுத் துறைத்தலைவர் பேராசிரியர் டி.ஆர்.ராமச்சந்திரன்[1]

வாரிசாக வந்த வனிதை

இல்தூத்மிஷ்ஷின் மூத்த மகன் மலிக் உஸ்கையத் நாசீர் உத்தீன் மாமூத்; பல்கலைகளில் திறமை பெற்றிருந்த இவர் இல்தூத்மிஷ்ஷின் மரணத்திற்கு முன்பே மறைந்து விட்டார். எனவே தனக்குப்பின் யார் பட்டத்திற்கு வரவேண்டுமென்று இல்தூத்மிஷ் முடிவெடுத்தார். தமது மகள் ரஸியாவே எல்லாவிதத்திலும் அரசுரிமைப் பெறத் தகுந்தவர் என்ற முடிவிற்கு வந்தார்.

ருக்னுத்தீன் பிரூஸ்

இல்தூத்மிஷ் மறைந்ததும் அவரது விருப்பத்திற்குமாறாக மாநில அதிகாரிகள் ருக்னுத்தீன் பீரூஸ் என்பவரை

1. டில்லி சுல்தானியத்தின் வரலாறு கி.பி. 1206 முதல் 1320 வரை முதல் பாகம், சென்னை, 1977, பக்கம் 46, 47.

அரசராகத் தேர்ந்தெடுத்தார்கள். இவரது அன்னையார் ஷாதுர்கான் துருக்கிய இனம்; வேலைக்காரியாக இருந்து அந்தப்புரத்தலைமையாளரானார்.

ருக்னுத்தீன் பிருஸ்ஷா ஆட்சி சிறப்பாக இல்லை. அவரது அன்னையார் அவரது பின்னால் இருந்து கொடிய ஆட்சியை நடத்தினார். ஷாதுர்கான் ரஸியாவை கொன்றுவிடவும். திட்டம் தீட்டியிருந்தார்.

தக்க சமயத்தில் அதற்கு இரையாகாமல் அச்சதித்திட்டம் அம்பலப்படுத்தப்பட்டதால் ரஸியா சுல்தான் உயிர் பிழைத்தார். இதற்குப் பின்னர் நாடு முழுவதும் எதிர்ப்பு அலை எழுந்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார் ரஸியா சுல்தான்.

6 மாதங்கள் 28 நாட்கள் நடைபெற்ற ருக்னுத்தீன் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஷாதுர்கான் சிறை பிடிக்கப்பட்டார். ரஸியா ராணியானார்.

ராணி ரஸியா

ரஸியா தில்லி சுல்தான்களின் அரசில் அரியணை ஏறிய முதல் மற்றும் ஒரே பெண் சுல்தான் ஆவார். 1210 இல் பிறந்த இவர் தனது 30வது வயதில் 13.10.1240 இல் மறைந்தார்.

குதுப்மினார்

சுல்தான் குத்புதீன் ஐபக்கின் மகள் வழி பேத்தி; சுல்தான் இல்துமிஷின் மகள் ரஸியா சுல்தான்.

தில்லியின் தென்மேற்கு பகுதியில் மெஹ்ரோஸி பிராந்தியம் பிந்திய துருக்கிய வம்சத்தின் தலைநகராக இருந்தபோது குத்புதீன் ஐபக் குதுப்மினாரைக் கட்டத்துவங்கினார். ராணி ரஸியாவின் தந்தை **இல்டுமிஷ் கால குவத்துல் இஸ்லாம் மசூதி, இல்துமிஷின் கல்லறை** இன்றும் ராணி ரஸியாவின் மூதாதையர்களது நினைவுகளை நமக்குச் சொல்கிறது.

சுல்தானா? சுல்தான்?

சிலர் ரஸியாவை சுல்தானா என்று குறிப்பிடுகின்றனர். 'சுல்தானா' என்பதற்கு சுல்தானுடைய மனைவி என்று

பொருளாகும். ரஸியா சுல்தானாகச் (ராணியாக) செயலாற்றினார் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

மின்ஹாஜ் சிராஜ்

அபு உமர் மின்காசுத்தீன் உஸ்மான் இப்னு சிராசுதீன்அல் சுசானி என்ற மின்ஹாஜ் சிராஜ் (Abuumar Minhaju -d din, Usman ibnsiraju - d din al Juzijani) மெர்வ் (Meru and Balkh) பால்க் பகுதியைச் சேர்ந்தவர். இவர் முகமது கோரியின் படையினருக்கு காஜியாகப் (Kazi) கி.பி.1186 இல் இந்தியாவில் பணியாற்றியவர்.

தபக்கத் - இ - நசிரி

மின்ஹாஜ் சிராஜ் எழுதிய புகழ்மிக்க வரலாற்று நூல் தபக்கத் இ – நசிரி (Tabakat - i - Nasiri) இஸ்லாமின் துவக்க காலம் முதல் கி.பி. 1259 வரையிலான வரலாற்றை 23 தொகுதிகளாக எழுதியுள்ளார். சமகால இந்திய ஐரோப்பிய வரலாற்று ஆவணம் இது.

எலியட் - டெலிசன்

H.M. Elliot, John Dowson இருவரும் தொகுத்த இந்திய வரலாறு எட்டு தொகுதிகள், அதில் இரண்டாவது தொகுதி 1866 – 1867 இல் வெளியானது. டில்லியிலிருந்து 2008 இல் வெளியான பதிப்பில் பக்கம் 259 முதல் 383 வரை தபக்கத் – இ நசிரி நூலின் பகுதிகளை ஆங்கிலத்தில் தந்துள்ளனர். அதில் சுல்தான் ரஸியா பற்றி பக்கம் 332 முதல் 337 வரை உள்ளது. பாரசீக மொழியில் எழுதப்பட்ட தபக்கத் – இ – நசிரி நூலை 1864 இல் Nassqu Less Khadimhusaion and Abdul Hayy பதிப்பித்தனர்.

அப்துல் ஹாய் ஹபீபி

Abdul Hayy Habibi காபூலைச் சேர்ந்தவர். அவர் பதிப்பித்த நூலை 1897 இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள். சம காலத்திய புகழ்மிக்க வரலாற்று நூலான மின்ஹாஜின், தபக்கத் இ.நாசிரியில் ரஸியாவை சுல்தான் என்றே குறிப்பிடுகிறார். (Sultan Raziyat al duniya waldinbint alsultan)

நாணயங்களில் சுல்தான்

ராணி ரஸியா காலத்தில் வெளியான நாணயங்களிலும் ரஸியா சுல்தான் என்றுதான் பொறிக்கப்பட்டுள்ளது. ஜலாலுதீன் ரஸியா காலத்தில் அச்சிடப்பட்ட நாணயங்களில் அவரது தந்தையின் பெயரையே பொறித்தார். இந்நாணயங்கள் வெளியிட்ட வருடத்தைக் கொண்டு ராணி ரஸியா வெளியிட்ட நாணயங்கள் என்று அறிய முடிகிறது.[2]

சதுர வடிவத்தில் வெள்ளியில் அச்சடிக்கப்பட்ட ரஸியாவின் நாணயத்தின் முன்புறம் ஃபி அஹ்த் அல் இமாம் அல் – முஸ்தான் சீர் அமீர் அல் – மோமினின் சுற்றிலும் ஜர்ப் ஹிசந்தா அல் – காஸ்பாஃபு ஷஹ்வார் சருஷ் காம்சவ சபசேய்ன் வசபா மயா பின்புறம் சதுரமாக அல் – சுல்தான் அல் ஆஜம் சம்சுத்துனியா வ அல் தீன் இல் துத்மிஷ் அல் சுல்தான் நஸ்ரத் அமீர் அல்மேமினின் சுற்றிலும் முன்புற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.[3]

ஹெச்.நெல்சன் ரைட்

H.Nelsonwright 'The coinage and metro logy of the sulthans of Delhi *என்ற நூலை எழுதியவர். அவர் மேலும்* Catalogue of coins in the Indian Museum *என்னும் நூலையும் எழுதியுள்ளார். அதில் இரண்டாவது தொகுதியில் 26 மற்றும் 93வது நாணயங்களிலும், சுல்தான் ரஸியா* al Sultan al Muazzam Raziyat al-din bint al sultan *என்று ராணி ரஸியா பெயர் பொறிக்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டுகிறார்.*

ரஸியா ராணியாக, சுல்தானாக இருந்தார் என்பதற்கு இவ்வளவு சான்றுகளைச் சொல்ல வேண்டியதாயிற்று. சுல்தானா என்றால் King's wife *என்று பொருள். சுல்தான் என்றால் அரசர் என்று (*King) *பொருள். ராணி ரஸியா சுல்தான் ஆவார்.*

---

2. டாக்டர் பரமேச்வரி லால் குப்தா நாணயங்கள், தமிழாக்கம் அ. குழந்தை, 1978, புது தில்லி, பக்கம் 136.
3. *Parameshwari Lal Gupta, Coins, New Delhi, 2016, Page 257.*

ஆட்சி நடத்திய அரிவையர்

ஆட்சி நடத்திய அரிவையர் என்றதும் முதலில் எகிப்து நாட்டின் கிளியோ பாட்ரா நமது நினைவிற்கு வருவார்; கி.மு. 332 இல் அரசு செலுத்திய உலக அழகி அவர்.

கி.மு. 2175 இல் எகிப்தில் அரசு புரிந்தவர் Nitokerty

Sobeknefru

கி.மு. 1760 – 1755 இல் எகிப்தில் அரசு புரிந்த பெண்ணரசி Sobeknefru.

ஹெட் செப் சுட்

எகிப்தில் வெண்ணரசி என்ற பெருமைக்குரியவர் பாரோகளின் (Pharaohas) *(பண்டைய எகிப்திய, அரசர்களின் பொதுப்பெயர்) காலத்தில் ஆட்சி புரிந்த ஹெட் செப் சுட்* (Hats Hepsut). *எகிப்தில் இவர் ஆட்சி புரிந்தது கி.மு. 1479 – 1473 இல்.*

Tawostret

கி.மு. 1198 முதல் 1190 வரை எகிப்தில் ஆட்சி புரிந்தவர் Tawosret

இதற்குப்பிறகு ஆறாவது பெண்ணரசியாக எகிப்தில் *கி.மு. 332 இல் அரசாண்டவர் கிளியோபாட்ரா*[4]

எகிப்தில் ஹெட் செப் சுட் ஆணுக்கு நிகராக ஆட்சி புரிந்தார். ஆண் பிள்ளையைப் போலவே உடையணிந்தாள்; பொய்த்தாடி அணிந்தார். கிரீடம் சூட்டிக் கொண்டாள். தாருல் பஹரியில் தன்னைப் புதைப்பதற்காக (Deirel Bahri) அவள் கட்டிய கல்லறை எகிப்தில் இன்றும் உள்ளது.

எகிப்தின் கடைசி ராணி

எகிப்தை அரசு செய்த கடைசி ராணி, இஸ்லாமிய ராணி ஷஜரத்துல்துர்.

ஷஜரத்துல் துர்

எகிப்தின் **ஷஜரத்துல் துர்** குறித்து தமிழில் ஏதேனும் நூல் வெளிவந்ததா என்று தேடினேன்.

N.B. அப்துல் ஜப்பார் பி.ஏ.

460, திருவல்லிக்கேணி ஹைரோடு ஷாஜஹான் புக்டிப்போ சென்னை *5* லிருந்து N.B. அப்துல் ஜப்பார் பி.ஏ. எழுதிய சரித்திர விசித்திர நாவல் முதல் பாகம் **ஷஜரத்துல் துர்,** *1960* இல் ஆறு ரூபாய் *50* காசுகள் விலையில் அச்சிடப்பட்டு *416* பக்கங்களில் அதன் முதல் பாகம் வெளிவந்துள்ளது. மற்ற பாகங்கள் வெளிவந்ததா இல்லையா என்பதை அறியேன்.

முத்துக்களாலான மரம்

---

4. National Geographic, Magazine The She - King of Eqypt April 2009, Page 88 -111. 2009 ஏப்ரல் நேஷனல் ஜாக்ரபீ இதழில் இதுகுறித்த செய்திகள் 24 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

ஷஜரத்துல் துர் என்பதற்கு அரபு மொழியில் **முத்துக்களாலான மரம்** *என்று பொருள்.*

இந்தியாவில் அரியணை ஏறி ஆட்சி நடத்திய ஒரே பெண்ணரசி ரஸியா. எகிப்து நாடு முஸ்லிம்களின் ஆட்சிக்கு வந்தபோது அங்கே அரியணையில் ஏறி ஆட்சி நடத்திய ஒரே பெண் அரசி ஷஜரத்துல் துர் ஆவார். அடிமைப் பெண்ணாக இருந்து அரசி ஆனவர்.

எகிப்து சுல்தான் மாலிக்குல்ஸாலிவர் ஐயூபியின் அபிமான அடிமை (வெள்ளாட்டி) ஷஜரத்துல் துர். கி.பி. 1233 இல் ஷஜரத்துல் துர் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தார். கலீல் என்று அக்குழந்தைக்குப் பெயர் சூட்டப்பட்டதால் ஷஜருத்துல்துரை உம்மு கலீல் என்று **(கலீலின் தாய்)** *அழைத்தார்கள்.*

ஹிஜ்ரி 648 கி.பி. 1250

எகிப்தின் அரசியாக கி.பி. 1250 இல் ஷஜரத்துல் துர் பொறுப்பேற்றார். அரசியின் பெயர் 'குத்பா'க்களில் (வெள்ளிக்கிழமை பகல் தொழுகையில் வாசிக்கப்படும் பிரசங்கம்) படிக்கப்பட்டது. அவளது உருவம் பொறித்த நாணயங்கள் வெளியிடப்பட்டது. ஷஜரத்துல் துர் அசல் ராணியாக ஆட்சி செய்தது எண்பது நாட்கள் தாம்.[5]

மாம்லூக்கிய ஆட்சி

சாதாரண நாடோடி வம்சப் பெண்ணாகப் பிறந்து, தன்னிச்சையாக வளர்ந்து, பொறுப்புள்ள மன்னர் மனைவியாக வாழ்ந்து, ஆட்சித்திறனும், நுண்ணறிவும், ராஜதந்திரமும், மிக்க அசாத்திய பெண்ணரசியாகப் பரிணமித்து, பரிதாபமான முறையில் கொலையுண்டு மடிந்தவர் ராணி ஷஜரத்துல்துர். எகிப்தில் மம்லுக்கிய ஆட்சி **கி.பி. 1250 முதல் 1517** *வரை கொடி கட்டிப் பறக்க, தழைத்தோங்க பாதையமைத்துக் கொடுத்த ராணி ஷஜரத்துல்துர்*[6] *அந்த இஸ்லாமியப் பெண்ணரசியை*

5. ஆர்.பி.எம்.கனி, முஸ்லிம் பெண்கள், சென்னை, 1959, பக்கம் 173.
6. பாத்திமுத்து சித்தீக், நைல்நதிக்கரையில், ஹைதராபாத், 1998 பக்கம், 300 - 304.

எகிப்தியர் மறக்காமல் கெய்ரோவிலுள்ள ஒரு தெருவிற்கு ஷஜரத்துல் துர் தெரு என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

சாந்த் பீவி

மாமன்னர் அக்பரோடு போரிட்டு வீரமரணமுற்ற **சாந்த் பீவி,** ஆப்கானிய அமீர்கானின் மனைவியான **சாஹிப்ஜி,** ஈரானில் கிர்மானில் ஆட்சி செலுத்திய லாலாகதூன், ஜான்பூரின் பீபிராஜி, மக்தூமா யொஜஹான், சீத்தீகா ஹஸ்னா போன்ற பதில் ஆட்சியாளராக (ரீ ஜெண்டாக இருந்தவர்கள்) அரசு செலுத்தியவர்கள், மத்தியப் பிரதேச போபாலில் 1819இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற குத்ஸியா பேகம் அவளது மகள் 1847இல் பொறுப்பிற்கு வந்த சிக்கந்தர் பேகம், அவரது மகள் ஷாஜகான் பேகம் 1868 – 1901 அவளது மகள் சுல்தான் கைருஸ்ரா (1901–1926) என போபால் பேகம்கள். ஆனால் ராணி ரஸியா டில்லி அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிந்தவர் அவரது ஆட்சி பற்றி கொஞ்சம் பார்ப்போம்.

அமைச்சர் தாஜுல் முல்க் மொகம்மது தபீரிடம் ரஸியாவை தனது வாரிசாக அறிவித்திட ஆவணங்கள் தயாரித்திட சுல்தான் இல்துமிஷ் காலத்திலேயே முயற்சி மேற்கொள்ளப்பட்டு, ரஸியானவை தனது வாரிசாக அறிவிக்கும் வகையில் 'டங்க்கா' என்ற வெள்ளி நாணயம் இல்துமிஷ் பெயரோடு ரஸியாவின் பெயரும் பொறித்து வெளியிடப்பட்டது.

சிவப்பு உடையில் - நியாயத்தை யாசகம்

பிரோஷ்ஷாவும், துர்க் சாத்தூனும் துரோகமிழைத்ததால் பட்டத்திற்கு வர தாமதமானது. இந்த நிலையில், ரஸியா சாகஸம் செய்தாள்; ராஜ தந்திர நடவடிக்கைகளில் இறங்கினார். வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் போது பள்ளி வாசலுக்கு சிகப்பு உடை தரித்து நகரவாசிகளுடன் நின்றார். அந்த நாட்களில் சிகப்புநிற உடையை யார் அணிந்திருக்கிறார்களோ அவர்கள் **நியாயத்தை யாசகம்** கேட்க விரும்புகிறார்கள் என்று கருதப்பட்டது.

டில்லி நகர மக்களுக்கு ரஸியா ஏன் சிவப்பு உடை தரித்து

வந்திருக்கிறார் என்பது புரியவில்லை. அப்போது ரஸியாவின் துயரமும் வேதனையும் நிரம்பிய குரல் அவர்களுக்கு கேட்டது. "என்னைப் பாதுகாக்க என் தந்தை சுல்தான் இல்துமிஷ் இன்று இல்லை. எனவே என்னை ஷாதுர்க்கின் சூழ்ச்சித் தந்திரங்களில் இருந்து காப்பாற்றுமாறு உங்களை கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

அரசிளங்குமரி

மக்கள் மனம் கவர்ந்த அரசிளங்குமரி ரஸியா வேண்டுகோள் – அவளது சிகப்பு உடையை மக்கள் புரிந்து கொண்டனர்; மக்களின் மனதைத் தொட்ட வேண்டுகோளை மதித்தனர். ரஸியாவை மதிப்பு – மரியாதை நிரம்பிய கண்ணோட்டத்துடன் ஏற்றனர்.

12.11.1236

மக்கள் ஆதரவுடன் 12.11.1236 இல் டில்லியில் ரஸியா, அரியணை ஏறினார். ரஸியா காத்தூன்', சுல்தான் ரஸியாவுதீன் ரஸியா சுல்தான் ஆனார். 'நான் ஒருவேளை உங்களை அதிருப்தி ஏற்படும் நிலைமைக்குத் தள்ளினால் நான் சுயமாக அரியணையிலிருந்து இறங்கி விடுவேன்' என்று மக்களுக்கு வாக்குறுதியும் தந்தார் ரஸியா சுல்தான். ஒரு அரசருக்கு இருக்க வேண்டிய அத்தனை பண்புகளும் அவருக்கு இருந்தது.

துருக்கியவர்க்கத்தின் எதிர்ப்பு

ஆட்சிப் பொறுப்புக்கு ரஸியா சுல்தான் வருவதற்கு டில்லி மக்கள், டில்லிப்படையினர் டில்லி அமீர்கள் (தலைவர்கள்) ஆகியோர் உறுதுணையாயிருந்தனர்.

மாநில ஆளுநர்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை. மாநில ஆளுநர்கள் துருக்கிய வர்க்கத்தில் முக்கியப் பங்கை வகித்தார்கள். தங்களது ஒப்புதலின்றி அரசியாக பதவியேற்ற ரஸியாவை அப்பதவியிலிருந்து அகற்றிட தக்க தருணத்தை எதிர்பார்த்து இருந்தனர்.

எதிர்த்த ஐவர் குழு

மலித் அலாவுத்தீன் ஜானி (Malik Jani) மலிக் சைப்புத்தீன் கூச்சி (Malik Kochi), மலித் இஸ்உத்தீன் முகம்மது சாலாரி (Malik Izzu - ddin Muhammad Salari) நிஜாமுல் முல்கி ஜூனெய்தி (Nizamn -1, Mulk Junaidi), மலீக் இஸ் உத்தீன் கபீர்கான் அயாஸ் (Malik Kabirkhan), இந்த ஐவரும் ரஸியாவை ராணியாக ஏற்க மறுத்தனர்.

இவர்கள் டில்லியை நோக்கி ராணி ரஸியாவை எதிர்த்துப் படையெடுத்தனர். டில்லிக்கு அருகே வந்தாலும் அவர்கள் டில்லியைத் தாக்கிட தைரியமில்லை. மக்கள் ஆதரவு ரஸியாவிற்கு இருந்தது. எனினும் கலகக்காரர்களை டெல்லிக்கு வெளியில் அதிக காலம் வைத்திருப்பது விவேகமாகாது என்று ரஸியா கருதினார்.

அவுத்தின் ஆளுநர் மலீக் நஸ்ரத் உத்தீன்

அவுத்தின் ஆளுநராயிருந்த மலீக் நஸ்ரத் உத்தீனை (Malik Nasiru - d din) உதவிக்கு அழைத்தார் ரஸியா சுல்தான். அவர் டில்லி வருவதற்குள் போரில் கொல்லப்பட்டார். நிலைமை கட்டு மீறிப் போவதை உணர்ந்தார் ரஸியா சுல்தான். படைகளைத் திரட்டிக் கொண்டு வெளியே வந்து எதிரிகளுடன் போரிட்டார். சிறு சிறு போர்கள்; அதனால் பலன் எதுவும் ஏற்படவில்லை. பகைவர்களை அழிக்க போர் மட்டும் போதாது என்று இராஜதந்திர நடவடிக்கைகளில் இறங்கினார்.

இஸ்உத்தீன் முகமதுசலாரி - இஸ்உத்தீன் கபீர்கான்

எதிரிகளான இஸ்உத்தீன் முகமது சலாரியுடனும், இஸ்உத்தீன் கபீர்கானுடனும் ரஸியா சுல்தான் கூட்டு சேர்ந்தார். அவர்களுடைய உதவி கொண்டு மற்றவர்களை ஒழித்திட முடிவெடுத்தார். இதனை அறிந்த எதிரிகள் ஓட்டம் பிடித்தனர். மலைப்பகுதிகளுக்கு ஓடினர்; உயிரிழந்தனர்; கொலையுண்டனர். தம்மை முதன்முதலாக எதிர்த்த எதிரிகளின் கூட்டணியை ரஸியா சுல்தான் வெற்றிகரமாக முறியடித்தார்.

டில்லி சுல்தானிய அரசியலமைப்பு வரலாற்றிலே இவ்வெற்றி சிறப்பிடத்தைப் பிடித்தது. அதாவது டில்லியை ஆளும் சுல்தானைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் மாநில ஆளுநர்களின் விருப்பத்திற்கு உயர்ந்த இடம் கொடுக்க வேண்டியதில்லை என்பதை ரஸியா சுல்தானின் வெற்றி முழுமையாக உணர்த்தியது.[7]

குவாஜா முஹா ஸாபுத்தீன்

நிஜாம் 'உல்முல்க்' என்ற (Nizamul Mulk) பட்டத்தையும் அளித்து குவாஜா முஹாஸாபுத்தீனை (Khwaja Muhazza-buddin) ராணி ரஸியா வசீராக (முதல்வராக) நியமித்தார்.

மலீக் சைப்புத்தீன் அய்பெக்பக்து

மலீக் ஷைபுதீன் அய்பெக்பக்து (Mulik Saifuddin Aibek Bahtu) போர் அமைச்சராக நியமிக்கப்பட்டார் அவர் சிறிது காலத்தில் மரணமடைந்தார்.

மலீக் குத்புத்தீன் ஹசன்கோரி

மலிக் குத்புத்தீன் ஹசன் கோரியை (Malik Qutbuddin Hasan Ghuri) ராணி படைகளுக்கான விவகாரங்களின் அரசருடைய உதவியாளராக நியமித்தார். (Naibi - laskkar) இந்தப் பதவி ரஸியாவால் உருவாக்கப்பட்டது.

இஸ் உத்தீன் கபீர்கான்

இஸ் உத்தீன் கபீர்கான் அயாஸ் (Izzuddin Kabit Khan Ayaz) லாகூர் இக்தாவைப் பெற்றார். (Iqta) (a governer ship) அதன் பின்னர் அவர் அரண்மனை அதிகாரிகளை நியமனஞ் செய்தார்.

மலிக் இ கபீர் இக்தியாருத்தீன் அயிடிஜின்

மலிக் – இ – கபீர் இக்தியாருத்தீன் அயிடி ஜின் (Malik-i-Kabir Ikhthiyar uddin Aitigin) அமீர் இ ஹஜீப் (Amir-i-Hajib) ஆக நியமிக்கப்பட்டார். (Officer-in-Charge of the royal Court)

7. *Indian Historical Quarterly. Volume XVI, Page 760*

மலிக் ஜமாலுத்தீன் யாகூத்

மலிக் ஜமாலுத்தின் யாகூத் தை (Malik Jamaluddin Yaqut) அமீர் இ – ஆக்கூராக (Amir-i-a khur) (Amir or Office Commanding the horse) குதிரைப்படைகளின் தலைவராக ராணி ரஸியா நியமித்தார்.

அமீர் இ ஆகூர்

மலிக் ஜலாலுத்தீன்யாகூத் துருக்கியர் அல்ல; அவர் அபீ சீனியாவைச் சேர்ந்தவர். இல்துமிஷின் மறைவிற்குப் பின் முக்கியப் பொறுப்புகளை துருக்கியர்களே பெற்றிருக்க வேண்டும் என்ற எண்ணம் வளரலாயிற்று. மேலும் மலிக் ஜமாலுத்தீன் யாகூத் நியமிக்கப்பட்ட அமீர் – இ – ஆகூர் பதவி இதுவரையில் துருக்கியர்களே வகித்து வந்தனர்.

ரஸியா சுல்தான் மலிக் ஜலாலுத்தீன் யாகூத்தை அந்தப் பதவியில் அமர்த்தியபோது துருக்கிய அமீர்கள் ஆத்திரங்கொண்டனர். ரஸியாவோ தமது நிர்வாகத்தை தானே நடத்த வேண்டும் என்று விரும்பினர். தனது தந்தை இல்துமிஷ் போலவே துருக்கியர், துருக்கியர் அல்லாத அன்னிய முஸ்லிம்கள் ஆகியோருடைய துணையுடன் ஆட்சியை நடத்த விரும்பினார்.

சதித்திட்டம்

இதனால் ஏற்பட்ட கருத்து வேற்றுமையே பின்னால் ரஸியாவை வீழ்த்துவதற்கான சதித் திட்டம் உருவாவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. சதித்திட்டம் பற்றிய முழுவிவரங்கள் வரலாற்றில் முழுமையாக கிடைக்கவில்லை. ஆயினும் அத்திட்டத்தை சதிகாரர்கள் செயல்படுத்துவதற்கு முன்னரே கபீர்கான் அயாஸ் ரஸியாவிற்கு எதிராகக் கலகம் செய்தார்.

கபீர்கான் அயாஸ்

கபீர்கான் அயாஸ் இல்துமிஷின் அடிமைகளில் ஒருவர்; (Multan) மூல்தானின் ஆளுநர்; சரியானபடி மூல்தான் நிர்வாகத்தைத் தொடராததால், அவர் அப்பதவியிலிருந்து இல்துமிஷால் நீக்கப்பட்டார். ருக்னுத்தீன் பிரோஸ்

காலத்தில் 'சுனாம்' (Sunam) இக்தாவைப் பெற்றார். ரஸியாவிற்கு உதவி செய்ததினால் லாகூர் இக்தாவைப் பெற்றார். ரஸியாவிற்கு எதிராக சதி நடந்து வருவதை அறிந்தார். எனவே ரஸியாவை எதிர்ப்பதில் தாம் முந்திக் கொள்ளவேண்டும் என்று எண்ணியதால் கலகம் செய்தார்.

மன்னித்தல்

அதையறிந்த ரஸியா சுல்தான் படைகளுடன் லாகூர் விரைந்தார். (ஹிஜ்ரி 636 கி.பி. 1238 – 1239) ரஸியாவை எதிர்க்க தைரியமில்லாத கபீர்கான் சோத்ரா (Sodra) விற்கு தப்பி ஓடினார். ரஸியா அவரை விடாது பின் தொடர்ந்தார்; அவரை வென்றார். இறுதியில் ரஸியா சுல்தான் கபீர்கானை மன்னித்தார். மூல்தான் (Multan) இக்தாராக நியமித்தார்.

நூர்துருக்

நூர்துருக் (Nur Turk) *என்ற கார்மேதிய அல்லது இஸ்மா யிலி அறிஞர்* (Carmathians or Ismailis) *தனது ஆதரவாளர்கள் ஆயிரம் பேர்களுடன் டெல்லி, குஜராத், சிந்து, டோப்* (Doab) *பகுதியில் இருந்து வந்து ஹிஜ்ரி 634 ரஜப் 6 இல் (5.3.1237),* (Jama Masijid) *வெள்ளிக்கிழமை ஜும்ஆ மஸ்ஜித்திற்குள் நுழைந்து அங்கு தொழுகைக்காக வந்திருந்தவர்களை கொல்ல ஆரம்பித்தார். குழப்பம் ஏற்பட்டது. டில்லி நகர மக்கள் திரண்டு ஆயுதம் தாங்கிச் சென்று அங்கு வந்தவர்களை விரட்டியடித்தனர்.*

நசுருத்தீன் ஆதம் - பல்ரமி-அமீர் நஸ்ரீ

நசுருத்தீன் ஆதம் (Nasiruddin Aitam), *பல்ரமி* (Balrami) *அமீர்நஸ்ரீ* (Amir Nasiri) *ஆயுதங்களுடன் இரும்புத் தொப்பிகளுடன் அங்கு நுழைந்தனர். ஷேக் நிஜாமுத்தீன் அவுலியா கன்சி, சர்க்கார் என்ற இறைநேசரின் ஆதரவும் ரஸியாவுக்குகிடைத்தது. எதிரிகள் விரட்டியடிக்கப்பட்டனர்.*[8]

மலிக் ஹசன் கார்லி

கி.பி. 1238 இல் கஜினியை ஆண்டு வந்த கோரா சாமிய (Kwazirizm) *ஆளுநர் மலிக்ஹசன் ஹார்லிக்* (Malik Hasan Karlug) *மங்கோலியர்களின் தாக்குதலைப் பொறுக்க இயலாமல் கஜினியை விட்டு டில்லிப் பேரரசுக்குள் ஓடிவந்தார். அவர் ராணி ரஸியாவுடன் இராணுவ ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள விரும்பினார். எனவே தமது மகனை ராணி ரஸியாவிடம் அனுப்பி வைத்தார். ராணி ரஸியா அவரை மரியாதையுடன் வரவேற்றார். அவரது செலவுக்குப் பணம் தந்தார். ஆனால் அவர் கோரிய இராணுவ உடன்பாட்டினை மேற்கோள்ள மறுத்தார். இவ்வாறாக டில்லி, அரசுக்கு மங்கோலியர்களால் ஆபத்து ஏற்படாதவாறு தடுத்தார் ராணி ரஸியா.*[9]

---

8. *Life and Times of Shaikh Fariduddin Ganj-i-Sarkar Page 31-32.*

9 *L.P.Sharma, History of Medieval India 1000 - 1740 An, New Delhi, 1991, Page 51.*

சதித் திட்டமும் ராணி கொலையும்

அயிட்டிஜின் (Aitigin), அல்தூனியா (Altunia) ஆகிய இருவரும் ரஸியாவின் கருணையால் உயர்பதவி பெற்றவர்கள்.

அயிட்டிஜின்

அயிட்டிஜின் அமீர் இ ஹஜீப் (Amir-i-hajib) Officer in Charge of the yoyal court) (also Called barbek in Turkish) பதவியை வகித்தவர். இருவரும் ரஸியாவை வீழ்த்த சதித் திட்டம் தீட்டினர்.

அல்தூனியா

தாபாரிந்தாவின் (Tabarhinda) ஆளுநராக இருந்தவர் அல்தூனியா, ராணி ரஸியா டில்லியில் இருக்கும் வரை அவரை ஒன்றும் செய்ய இயலாது என்றும் ரஸியாவால் நியமிக்கப்பட்ட அதிகாரர்களின் துணையின்றி அவரை வீழ்த்த இயலாது என்றும் சதிகாரர்கள் நன்றாகப் புரிந்து கொண்டார்.

ராணி சிறைப்படல்

அல்தூனியா தாபாரிந்தாவில் கலகத்தை துவக்கவேண்டும். அதனை அடக்க ராணி ரஸியா அங்கு செல்வார்; செல்லும் வழியில் உள்ள ரஸியாவின் அமீர்கள் அவருக்கு எதிராகக் கலகம் செய்யவேண்டும். அவரைப் பதவியிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும். இதுதான் சதிகாரர்களின் திட்டம். அதன்படியே 1240 இல் அல்தூனியா கலகத்தை ஆரம்பித்தார். ராணி ரஸியாவும் தாபரிந்தா நோக்கி புறப்பட்டார் அவருடன் அபீ சினிய கறுப்பின யாகூத் உடன் சென்றார். முதலில் அவர் துரோகிகளால் கொல்லப்பட்டார். ராணி ரஸியா வஞ் சகமாகச் சிறைபிடிக்கப்பட்டார். செய்தி டெல்லி சென்றது.

பராம்ஷா

பராம் ஷா (Mui Zuddin Baharam Shah) சுல்தானாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அயிட்டிஜின் நாயவ் – இ –

மம்லாகத் அதாவது உதவி சுல்தான் ஆனார். ஆனால் கொல்லப்பட்டார். அல்தூனியாவிற்கும் தகுந்த வெகுமதி தரப்படவில்லை.

டில்லி நோக்கி ரஸியா

ராணி ரஸியா இந்தச் சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கிக் கொள்ள முயன்றார். அல் தூனியாவுடன் நட்புக்கரம் நீட்டினார். இருவரும் திருமணம் செய்து கொண்டனர். ஹிஜ்ரி 638 சபரில் 1240 செப்டம்பரில் இத் திருமணம் நடைபெற்றது.

அல்தூனியாவும் ராணி ரஸியாவும் டெல்லி நோக்கி படையெடுத்து வந்தனர். பாரம்ஷா அவர்களை எதிர்கொண்டு வந்தார். டில்லிக்கு வரும் வழியில் ஹிஜ்ரி 638 ரயியுல் அவ்வல் 24 இல் கி.பி. 1240 அக்டோபர் 14 இல் ராணி ரஸியா கொல்லப்பட்டார்.

3 வருடங்கள் 6 மாதங்கள் 6 நாட்கள்

மூன்று வருடங்கள் ஆறுமாதங்கள் ஆறுநாட்கள் ஆட்சி புரிந்த ராணி ரஸியாவின் ஆட்சி முடிவுக்கு வந்தது. மூன்று வருடங்கள் 6 நாட்கள் மட்டும் ஆட்சி புரிந்தார் என்பாரும் உண்டு.

துயர முடிவு

கவலையோடு ஒரு மரத்தின் நிழலில் ராணி ரஸியாவும் அல்தூனியாவும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். தங்களின் நிச்சயமற்ற பாதுகாப்பு இல்லாத இருள் சூழ்ந்த எதிர்காலம் பற்றி யோசித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ராஜஉடை, ஆபரணங்கள் இவைகளால் சில கொள்ளையர்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். நிலைமை என்ன என்பதை புரிந்து கொண்டு தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு முன்பதாகவே அவர்கள் இருவரும் கொள்ளையர்களால் கொல்லப்பட்டனர்.[10] டெல்லிக்கு மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள அல்ஜெலின் ஆற்றங்கரையில் அவரின் அடக்க ஸ்தலம் உள்ளது.

---

10. ரஷ்மீஸ்வரூப் ஜோஹரி தமிழாக்கம் நங்கை நகர் SKI சாமி, ரஸியா சுல்தான் புதுதில்லி, 2017, பக்கம் 32.

ராணி ரஸியாவின் அடக்கஸ்தலம் பழைய தில்லி புல்புலிகானாவில் உள்ளது என்பது வரலாற்றாசிரியர் சிலரது கருத்தாகும்.

அரசியார் மீது அவதூறும் அதற்குறிய பதிலும்

ராணி ரஸியா இளமையில் வீரம் நிறைந்தவர் ஒரு சமயம் தனது தந்தை இல்டுமிஷ் உடன் வேட்டைக்குச் சென்றிருந்தார். அரண்மனைப் பெண்கள் சற்று பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். இல்டுமிஷ் முன்னேறிச் சென்று கொண்டிருந்தார். அப்போது சிங்கம் ஒன்று பயங்கரமாக உறுமியவாறு பாய்ந்தது. இல்டுமிஷ் அதனுடன் மரணப்போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்.

பின்னால் வந்து கொண்டிருந்த ரஸியா அதைப் பார்த்தார் உடைவாளை உருவினார். சிங்கத்தை வெட்டினார். சிங்கம் செத்து விழுந்தது. இல்டுமிஷ்ஷை சிங்கத்திடம் இருந்து காப்பாற்றிய வீரப்பெண்மணி ரஸியா.[11]

துருக்கிய அடிமைகள் அரசு நிர்வாகப் பொறுப்புகளைத் தங்கள் கைகளில் வைத்துக்கொள்ள விரும்பினார்கள். ஆனால் ரஸியா எல்லா அதிகாரங்களையும் தம் கைகளிலேயே வைத்திருப்பதென முடிவு செய்தார். ரஸியாவிற்கும் துருக்கிய அடிமைகளுக்கும் இடையே ஏற்பட்ட போர், அதிகாரம் பற்றிய போரேயன்றி ஆண்மைக்கும், பெண்மைக்கும் இடையே நடந்த போராகாது. துருக்கிய அடிமை அதிகாரிகளைக் கட்டுப்படுத்த துருக்கியரல்லாத அதிகாரிகளின் கூட்டமொன்றைத் தோற்றுவித்தார் ராணி ரஸியா.

அப்போதுதான் யாகூத் என்ற அபீசீனியரிடம் நெருங்கிப் பழகினர். அது குறித்தும் ஐயத்தை கிளப்பினார்கள். அதில் உள்ள உண்மை என்ன?

---

11. அல்லாமா ஸ்ய்யித் ஸுலைமான் நத்வி (உருது) தமிழில் மௌலவி A.முஹம்மது ஸிராஜீத்தின் நூரி வீரம் நிறைந்த இஸ்லாமியப் பெண்கள், திண்டுக்கல் 1992 பக். 33, 34.

யாகூத்தும் - ராணி ரஸியாவும் காதலர்களா?

துருக்கியரல்லாத, அபி சீனியாவைச் சேர்ந்தவர் மலிக் ஜமாலுத்தீன்யாகூத் (Malik Jamaluddin Yaqut). குதிரைக் கொட்டிலுக்கு மேற் பார்வையாளராக நியமிக்கப்பட்டார். யானைகள், குதிரைகள் அடங்கிய கொட்டிலுக்கு முக்கிய பதவியான மேற்பார்வையாளர் பதவி கொடுக்கப்பட்டது.

அது பல துருக்கிய பிரபுக்களுக்குப் பிடிக்கவில்லை பல அமீர்கள் அதை ஆதரிக்கவில்லை. அதற்கு காரணம் இராணுவம் முக்கியத்துவம் வாய்ந்த அந்த பதவியை துருக்கியர் பலர் இருக்கும்போது, ஆப்பிரிக்க – அபிசீனிய அடிமைக்கு அரசி ரஸியா கொடுத்ததை அவர்கள் விரும்பவில்லை.

ராணி ரஸியா இராணுவம் சம்பந்தமான ஆலோசனைகள் பலவற்றை மலிக்ஜமாலுத்தின்யாகூத்திடம் கேட்டு அறிந்தார்.

ஆலோசனை நெருக்கம்

இருவருக்கும் இடையே ஆலோசனை நெருக்கம் அதிகமானது. அரசிக்கும் அடிமைக்கும் காதல் என்று வதந்தியைப் பரப்பினர். ராணி ரஸியா குதிரையின் மீது ஏறும்போதும் ஒவ்வொரு முறையும் ராணி ராஸியாவின் அக்குளில் கைவைத்து அவளை குதிரை மீது ஏற்றி விட்டார் யாகூத் என்பது அவர்களது குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டு உண்மையா?

இக்குற்றச்சாட்டுக்கும், இருவரிடையே கூடா உறவு இருந்தது என்பதற்கான எந்த சான்றும் இல்லை.[12]

L.P.சர்மா

மூத்த வரலாற்று விரிவுரையாளர் டில்லிப் பல்கலைக்கழக சிவாஜி கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர் எல்.பி.சர்மா அவர் தனது நூலில் தெள்ளத் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

---

12. டாக்டர் க.வெங்கடேசன், இந்திய வரலாறு சிந்து முதல் பிளாசி வரை கிமு 3000 முதல் கிபி 1757 வரை, இராஜபாளையம், 2016, பக்கம் 471-472,

Contemporary historian Isami blamed her to be in immoral romance with Jamal - ud - din - yakut. But no proof is available to testify this allegation and therefore hasbeen rejected by all modern historians. She was successful as a diplomat.[13]

ஜமாலுத்தீன்யாகூத் – ராணி ரஸியா மீது சொல்லப்படும் காதல் குற்றச்சாட்டுகளுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. எனவே அக்குற்றச்சாட்டை வரலாற்று ஆசிரியர்கள் தள்ளி விடுகின்றனர். வெற்றிகரமான ராஜ தந்திரி ராணி ரஸியா என்பார் எல்.பி.சர்மா

ரபீக்சக்கரியா

ரபீக்சக்கரியா Razia; Queen of India *எனும் நூலை 1966 இல் 148 பக்கங்களில் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். இது சரித்திரமும் கதையுமாக கலந்து வெளிவந்துள்ளது.*

நடேஷ்சர்மா

Razia and the pesky Presents *நடேஷ சர்மாவினால் 2015 இல் எழுதப்பட்ட நூல் இதுவும் கதையும் வரலாறும் கலந்து எழுதப்பட்டது தான்.*

வை.சூரிய நாராயண சாஸ்திரி

நமது பரத கண்டம் முதற் பாகம் ஆரிய சூரியன் எனும் வரலாற்று நூலை 1925இல் 1 ரூ 14 அணா விலையில் தந்தவர் **வை.சூரிய நாராயண சாஸ்திரி (பரிதிமாற் கலைஞர்), 264 பக்கங்கள் கொண்ட அந்த நூலில் பக்கம் 155 ல் ஸுல்தானா ரஜையா ஆடவரைப் போல வீரத்தனமும் கண்ணியமும் உள்ளவர்** *என்று ராணி ரஸியாவைப் போற்றியுள்ளார்.*

Dr.S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்

இந்து தேச சரித்திரம் முதல் பாகம் ஆதிகாலம் முதல் முகம்மதிய ஆட்சி ஸ்தாபனம் வரை எனும் நூலை Dr.S.*கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் 1940 இல் 283*

---

13. L.P.Sharma, The Sultanate of Delhi 700-/ 1526, New Delhi 1988, Page 97.

பக்கங்களில் தந்துள்ளார். அதில் பக்கம் 268 இல் **ரஸியா நிர்வாகத்திறமையும் போர்த்திறமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தாள் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

R.சத்தியநாதய்யர்

A College Text Book of Indian History 3 தொகுதிகளை பேராசிரியர் R.சத்தியநாதய்யர் ஆங்கிலத்தில் தந்துள்ளார். அதில் 1941 இல் சென்னையிலிருந்து வெளிவந்த இரண்டாவது தொகுதி 647 பக்கங்கள் கொண்டது. அதில் பக்கம் 12, 13 இல் ராணி ரஸியா பற்றி எழுதியுள்ளார். பக்கம் 13 இல் சத்தியநாதய்யர் கூறுகிறார்.

There seems to be no valid ground for accusing her of criminal intimacy with yakut.

ராணி ரஸியா யாகூத் தவறான உறவுக்கு எந்தவிதமான சான்றுகளும் இல்லை என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

R.சத்தியநாதய்யர் - D.பாலசுப்பிரமணியன்

இந்திய வரலாறு இரண்டாம் தொகுதியினை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் 1969 இல் R.சத்தியநாதய்யர் D.பாலசுப்பிரமணியம் மொழி பெயர்ப்பில் 538 பக்கங்களில் வெளியிட்டுள்ளனர். அதில் பக்கம் 13 இல்.

‘யாகூட்டிடம் (யாகூது) அவள் (ரஸியா) கொண்ட தொடர்பு ஒழுக்கக் கேடானது தென்று கூறவும் தக்க சான்றில்லை என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

ஸ்டான்ஸி லேன் பூல்

Medieval India Under Mohammedan rule AD 712- 1764 எனும் ஆங்கில நூலை ஸ்டான்லி லேன்பூல் (Stanley lane Poole) இலண்டனில் 1903 இல் வெளியிட்டார். அதன் 15வது பதிப்பு 1926 இல் 449 பக்கங்களில் வந்துள்ளது. அதில் பக்கம் 75 இல்,

ராணி ரஸியா குற்றமற்றவள் அபிசீனிய யாகூத் விஷயத்தில் அப்பாவி; என்று தெள்ளத் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

டாக்டர் ந.சுப்பிரமண்யன்

இந்திய வரலாற்றை எழுதிய டாக்டர் ந.சுப்பிரமண்யன் தமிழ்நாட்டு வரலாற்று ஆர்வலர்களுக்கு அறிமுகமானவர். 1964, 1969, 1989 இல் வெளிவந்த 'இந்திய வரலாறு' நூல் 2009 இல் 800 பக்கங்களில் வெளிவந்தது அதில் பக்கம் 264 இல் ந.சுப்ரமண்யன் கூறுகிறார்

நண்பனாக அறிவுரையாளனாக

'இந்நிலையில் அரசவையில் இருந்த, ஜலாலு தீன்யாகூத் எனும் ஆப்பிரிக்கன் ஒருவன் (அவளது) **ரஸியாவின் நண்பனாகவும் அறிவுரையாளனாகவும் ஆக்கிக் கொண்டான்.** *ராணி ரஸியாவின் நல்ல நண்பர்; திறமையான அறிவுரையாளர் யாகூத் என்பதை ந.சுப்ரமண்யன் தெளிவாகக் கூறியுள்ளார்.*

The Cambridge History of India

ஏழு தொகுதிகளைக் கொண்ட இந்திய வரலாற்று கேம் பிரிட்ஜ் ஹிஸ்டரி ஆப் இந்தியா எனும் ஆங்கில நூலாக வெளிவந்துள்ளது அதில் மூன்றாவது தொகுதி Turks and Afghans.

சர் வுல்ஸ்லிஹக்

Lt. Colonel sir wolseley Haiq *தொகுத்த மூன்றாவது தொகுதி 1987 இல் வெளிவந்த பதிப்பு 803 பக்கங்களைக் கொண்டது. அதில் பக்கம் 59 இல் தெள்ளத் தெளிவாகச் சொல்லுகிறார்.*

'Later historians suggest or Insinuate that there was impropriety in her relations with him, but the **contemporary** Chronicler makes no such allegation, and it is unnecessary to believe that she stooped to such a Connexion.

சம கால வரலாற்றாசிரியர்களால் கூறப்படாத அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டு இது. யாகூத் – ரஸியா உறவு பற்றிய தவறான தகவல் என்று தெளிவாகச் சொல்லியுள்ளார். சர்.வுல்ஸ்லிஹக்.

Minhaju -s-siraj

'Sultan Raziya was a great monarch. She was wise, just and generous, a benefactor to her kingdom, a dispenser of justice, the protector of her subjects, and the leader of her armies, she was endowed with all the qualities befitting a, king, but she she was not born of the right sex, and so in the Estimation of men all these Virtues were worth less.[14]

வல்லமை பொருந்திய அரசி

ராணி ரஸியா வல்லமை பொருந்திய அரசி; அறிவுமிக்கவர்; நீதிமான்; நலஞ் செய்யும் தன்மை வாய்ந்தவர்; கல்வியறிவாளரை ஆதரிப்பவள்; நடுநிலைமை உடையவள்; மக்களால் விரும்பப்பட்டவள், பேராற்றல் வாய்ந்தவர். சுருங்கச் சொல்லின் அரசருக்கு இன்றியமையாததான பண்புகள் யாவற்றையும் பெற்றவர். ஆனால் அவள் ஆணாகப்பிறவாத காரணத்தால் ஆடவர் அக்குணங்களைப் பாராட்டவில்லை என்று சமகால வரலாற்று ஆசிரியரான மின் ஹாஜ்சிராஜ் தெள்ளத் தெளிவாகச் சொல்லியுள்ளார். மின் ஹாஸ் சிராஜ் acquired favour in attendance upon sultan *என்றே குறிப்பிட்டுள்ளார்.*[15]

எட்வர்டு தாமஸ்

எட்வர்டு தாமஸ் தனது Chronicles of the Pathan Kings of Delhi 1871 *நூலில்* **ராணி ரஸியாவின் நடத்தையில் வேண்டுமென்று குற்றம் கற்பித்துள்ளார்.**

---

14. *H.M.Elliot and John Dowson, The History of Indian as told by its Own Historians The Mohammadan Period, Delhi, First edition 1867 - 77 Reedition 2001, Page 332.*
15. *Raverty, Tabaqat-i-Nasiri-Minhat-ud din siras Persian Abdue Hyy. English Habibi Kabul, Trans Lation, Bib Indica, 1897 Volume I P.642.* ராணி ரஸியாவின் சமகாலத்தவறான வரலாற்றாசிரியர் மின் ஹாஜ்சிராஸ் யாகூத்தை ராணி ரஸியா ஆதரித்தார் என்று மட்டுமே குறிப்பிடுகிறார்.

Thomas has assailed the Characher of this Princess without just cause, என்பார் ஆர்.சி.மஜூம்தார்.[16]

திருக்குர் ஆன் ஓதுதல்

இஸ்லாமியரின் திருமறையாம் திருகுர்ஆனை தக்க உச்சரிப்புடன் தினமும் ஓதுவார் ராணி ரஸியா.

தமது பகைவர் மீது போருக்குச் செல்கையில் பெண் உடைகளையும் முகமூடிகளையும் நீக்கப் போர் வீரனின் உடைபூண்டு ஆண் மகனின் தலையுடையுடன் விளங்குவார். தர்பாரில் அமர்ந்து அரசியல் அலுவல்களைத் தக்க திறமையுடன் கவனிப்பார். எல்லா வகையிலும் தாம் ஓர் அரசர் என்று தோன்றும்படி நடந்தவர் ராணி ரஸியா.

The Sultan Raziya now threw off the dress and veil of women, She Put on a Coal (Kaba) and Lap, and Showed her self among the people. When she rode on an elephant all men cleary sawher.[17]

குதிரையில் அல்ல யானை மீதே சவாரி

சம கால வரலாற்றாசிரியர் கூற்றுப்படி ராணி ரஸியா குதிரையில் மீது சென்றதாக குறிப்புகள் இல்லை. யானையின் மீதே கம்பீரமாகச் சென்றார். யானை மீது ஏறிச்செல்ல யாகூத் போன்றவரின் உதவி அவசியமில்லை என்பது தெளிவாகிறது.

சதிஷ்சந்திரா

“துருக்கிய பிரபுக்கள் பெண்களின் விழுமியங்களை ராணி ரஸியா தகர்ப்பதாகவும், ஒரு அபீசீனியப் பிரபுவான யாகூத்கானிடம் அதிக நட்புக்கொண்டுள்ளதாகவும் குற்றம் சாட்டினர். யாகூத்கான் அரச நிலையத்திற்குக் காவல்துறைகள் காணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அரசியுடன் நெருக்கமாக இருக்க வேண்டியதையும் உட்படுத்திய பதவி அது.”

---

16. *R.C.Majumdar, H.C. Raychaudhuri, Kalikinkar Datta, An Advanced History of India, London, 1963, Page 286.*

17. முற்கூறிய எலியட் டௌசன் நூல் பக் 335.

அற்பத்தனமான குற்றச்சாட்டு

"ஆனால் **சம கால வரலாற்று ஆசிரியர்கள் ரஸியாவுக்கு யாகூத் கானிடம் எந்தத் தனிப்பட்ட பழக்கமும்** *இருந்ததாகக் குற்றம் சாட்டவில்லை."*

குதிரையின் இருக்கையில் இருந்து இறக்குவதற்காக அவர் அவரைத் தூக்கினார் என்பதே அப்பெண் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. இக்குற்றச்சாட்டு அற்பத்தனமானது. ஏனென்றால் ரஸியா பொது இடத்தில் எப்போதும் யானை மீது தான் சவாரி வருவாரே தவிர குதிரை மீதல்ல.[18]

But contemporary writers have not accused Raziya of any personal intimacy with him; The charge that he used to lift her from the arms-Pit to her horse is wrong because Raziya always appeared in public on an elephant, not on horse - back.

ராணி ரஸியா சவாரி செய்தது குதிரையில் அல்ல யானையில் தான் என்பார் சதிஷ் சந்திரா.[19]

அடிப்படையற்றது

ராணி ரஸியா மீது கூறப்படும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்பார் பேராசிரியர் K.A.நிஜாமி,

The impression that there was some thing shady in her preference for Jamaluddin yaqut is absolutely baseless.[20]

---

18. சதிஷ்சந்திரா, மத்திய கால இந்திய வரலாறு தமிழில் வேட்டை எஸ்.கண்ணன், சென்னை. 2016 பக் 105.

19. *Satish Chandra, History of Medieval India, Hyderabad, 2018, Page 80.*

20. *Professor K.A. Nizami, The Early Turkish Sultans of Delhi, A Comprehensive History of India, five Part one. The Delhi Sultanat Edited by Mohammad Habid Khaliq Ahmad Nizami, Peoples Publishing House (P) Ltd., New Delhi, 2006, (Firt Puslished 1970) Page 243.*

கைராட்டையை நாட்டுக்குத் தந்தவர்

இலுதுத்தீன், நஸீருத்தீன் ஜலாலுத்தீன், கபீருத்தீன் என்றும் நான்கு நீதிபதிகள் ரஸியாவின் அரசவையில் இருந்தார்கள். இவர்களது ஆலோசனையை ரஸியா பெறுவார். ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. எல்லா மத சாதியாரும் ஒரே இடத்தில் உணவு உண்டார்கள். மக்களுக்கிடையில் அன்பும் சகோதர உணர்ச்சியும் ரஸியாவின் ஆட்சியில் இருந்தது.

தொழுகை இல்லாத முஸ்லிம்களுக்கு சவுக்கடி தரப்பட்டது. முஸ்லிம் தனவந்தர்களிடம் ஜகாத் ஏழைவரி வசூலிக்கப்பட்டு இஸ்லாமிய முறைப்படி செலவு செய்யப்பட்டது. நீதி வழங்குவதிலும், மத விஷயத்திலும் கல்வி முன்னேற்றத்திலும் ரஸியாவின் பங்களிப்பு அதிகம்.[21]

ரஸியா சுல்தானின் கல்லறை.
புல் புலி கானா, பழைய தில்லி

ஜலாலுத்தின்

ஜலாலுத்தீன் என்ற பட்டப்பெயருடைய ராணி ரஸியாவிற்கு இப்னுபதூதா ரசியாத் என்ற பெயரைத் தருகிறார்.

---

21. ஸையித் இப்ராஹிம் இந்தியாவின் முஸ்லிம் ஆட்சி, சென்னை, 2014 பக்கம் 80 - 84 பார்க்கவும்.

ரசியாத் ரசீயதுத்தீன்

ரசியத்தீன் Raziyyat, ud-din *என்பதற்கு* **மதத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்** *என்று* பொருளாகும்.எல்லா *ஆண்களின் கண்ணுக்கு எதிராக யானை மேல் சவாரி செய்து கொண்டு வரும் குடிமக்களின் நலனைக் காக்கும் அரசி ரஸியா காலத்தில் தான் நூல் நூற்கும் கைராட்டை அறிமுகப்படுத்தப்பட்டது.*

முந்தைய ஆதாரம்

இந்தியாவில் கிடைக்கின்ற முந்தைய ஆதாரத்தின்படி (கி.பி.1350) சுல்தான் ரஸியா காலத்தில் கைராட்டை பயன்படுத்தப்பட்டது என்று இசாமி கூறுகிறார்.

'The woman (alone) is good who works all the time with the Charkha (Spinning) Wheel [22]

தபான் ராய் சௌத்ரி - இர்பான் ஹபீப்

கைராட்டையை இந்தியாவில் அறிமுகம் செய்தவர் ராணி ரஸியா என்று தபான்ராய் சௌத்திரி மற்றும் பேராசிரியர் இர்பான் ஹபீப் கூறுகிறார்கள்.[23]

ஜான் கே

ஜான்கே (John Keay) *என்ற வரலாற்றாசிரியர் எழுதிய* India A History, Form the Earliest Civilisations to the Boom of the Twenty First Century *எனும் 658 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூல் 2010 இல் இலண்டனில் இருந்து வெளிவந்துள்ளது. அதில் பக்கம் 245 இல் கூறுகிறார். இதோ அது;*

The inference is atmost inescapable that the spinning wheel came to India with the Muslims.

---

22. ***Isami, (1350), Futuhu's Salatin, Ed. A.S. Usha, Madras 1948.***
23. *Tapan Ray Chaudhuri, and Irfan Habib, The Cambridge Economic History of India, Volume I, C 1200 - C. 1750, New Delhi, 2007, Page 77-78.*

இர்பான் ஹபீப் நூலிலிருந்து இந்த விஷயத்தை பேராசிரியர் ஜான்கே தருகிறார்.

நல்ல அரசி; நயவஞ்சகர்களால் நச்சுக்கருத்தால் விமர்ச்சிக்கப்பட்டவர். அதற்கு இச்சிறுநூலில் தக்க பதில் தரப்பட்டுள்ளது.

நாட்டுக்குழைத்த இந்தியாவின் ஒரே முஸ்லிம் ராணி ரஸியாவின் புகழ் இஸ்லாமிய சரித்திரத்தில் என்றென்றும் மிளிரும்.

நீதிமானாக, உழைப்பாளியாக, அனைவருக்கும் நல்லவராக அரசு புரிந்து கைராட்டையில் நூல் நூற்று எளிமையுடன் திகழ்ந்த அந்த அரசியின் புகழ் போற்றுதலுக்குரியது என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ!

இந்தியாவில் டில்லியில் அரசாண்ட ஒரே இஸ்லாமிய அரசி ரஸியா சுல்தானா. அவர் வாழ்க்கை வரலாறு இந்திய வரலாற்றில் ஒரு பாராவாக அல்லது ஓரிரு வரியாக உள்ளது. அத்துடன் அவரது ஒழுக்கத்தின் மீது களங்கமும் கற்பிக்கப்படுகிறது.

ராணி ரஸியா சுல்தானாவின் உண்மை வரலாறு என்ன? அதனைச் சொல்வதே இச்சிறிய நூல்.

ISBN 978-81-953034-4-1

9 788195 303441

ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

₹25